அரியானாவில் கலவரக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து

# இயல்பு நிலை திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக. 5 -

அரியானா மாநிலத்தில் மதவன்முறையில் ஈடுபட்டு வரும் கலவரக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து இயல்பு நிலை திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

ஹரியானா மாநிலத்தில் அண்மையில் நடந்த மத வன்முறை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஹரியானா மாநிலத்தில் அண்மையில் நடந்த மத வன்முறையில் பாதிக்கப்பட்டு, பெரும் வேதனைக்கும் கடுந்துயருக்கும் ஆளாக்கப்பட்டுள்ளோருக்காகவும் அவர்களின் குடும்பத்தினருக்காகவும் மனமிரங்குகிறேன். அமைதி, அகிம்சை, நல்லிணக்கத்துடன் வாழ்தல் ஆகியவற்றில்தான் உண்மையான வலிமை உறைந்துள்ளது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். வெறுப்புணர்வும் பிரிவினையும் நம்மை ஆட்கொள்ள நாம் அனுமதிக்கக் கூடாது.**

**கலவரக்காரர்கள் எந்தத் தரப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து, விரைவில் இயல்புநிலை திரும்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இனி இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதைத் தக்க முறையில் உறுதிசெய்திட வேண்டும் என்றும் ஹரியானா அரசினை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்தியப் பெருநகரங்கள் அனைத்துக்கும் வெள்ளத்தடுப்பு மேலாண்மையில்

# சென்னைதான் முன்மாதிரி என்ற நிலையை எய்துவதே இலக்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக.5–

இந்தியப் பெருநகரங்கள் அனைத் துக்கும் வெள்ளத்தடுப்பு மேலாண்மையில் சென்னைதான் முன்மாதிரி என்கிற நிலையை எய்துவதே நம் இலக்கு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

**ஆட்சிக்கு வந்தபோதே கொரோனா என்ற பெருந்தொற்றை எதிர்கொண்டு கட்டுப்படுத்தினோம்.**

**தொடர்ந்து, அனைத்துத் துறைகளையும் முடுக்கி விட்டு, சென்னை முழுவதும் மழைநீர் வடிகால்களை ஆலோசனைக் குழுவின் துணையோடு ஆய்வின் அடிப்படையில் அமைத்தோம்.**

**அதன் பயனைக் கடந்த பருவமழைக் காலங்களில் கண்கூடாகப் பார்த்தோம். சிறு மழைக்கே நீர் தேங்கிய பகுதிகளில், தற்போது பெருமழை பெய்தாலும் சில மணி நேரங்களில் மழைநீர் வடிவதை மக்களும் ஊடகங்களும் எடுத்துரைத்தனர்.**

**மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் எஞ்சியுள்ள பகுதிகளிலும் இன்று ஆய்வு மேற்கொண்டேன். இந்தியப் பெருநகரங்கள் அனைத்துக்கும் வெள்ளத்தடுப்பு மேலாண்மையில் சென்னைதான் முன்மாதிரி என்ற நிலையை எய்துவதே நம் இலக்கு.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில்

# வேளாண் துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!



*புதுடெல்லி, ஆக. 5*

*தேசிய அளவில் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக வேளாண்மைத்துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.*

*அதன் விவரம் வருமாறு :*

*(அ) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத் துறை முக்கிய பங்கு வகித்து வருகிறதா ?*

*(ஆ) அப்படியானால், கடந்த 5 ஆண்டு காலகட்டத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு பற்றிய விவரங்களை அளிக்கவும்.*

*(இ) நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு குறைந்து வருகிறதா? அவ்வாறாயின் அதன் விவரங்களை அளிக்கவும். இல்லையாயின் அதற்கான காரணங்களை குறிப்பிடவும்.*

*(ஈ) அடுத்த மூன்று ஆண்டுகளில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கு அரசு ஏதேனும் இலக்கை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால் இலக்கை அடைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?*

*(உ) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) வேளாண்மைத் துறையின் பங்களிப்பை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?*

*மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அளித்த பதில் வருமாறு:-*

*(அ) முதல் (இ) வரை : புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2022-23ஆம் ஆண்டின் மொத்த தேசிய வருமானத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்த மதிப்புக் கூட்டலில் (ஜி.வி.ஏ) விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் பங்கு குறித்து பட்டியலில் அளிக்கப் பட்டுள்ளது.*

*(ஈ): கடந்த ஆறு ஆண்டுகளில் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகள் ஆண்டுக்கு 4.4% என்ற அளவில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. வேளாண் துறையின் வளர்ச்சிக்கு என்று ஒன்றிய அரசு எந்தவொரு குறிப்பிட்ட இலக்கையும் நிர்ணயிக்கவில்லை.*

*(உ): வேளாண்மையில் உள்ள வளர்ச்சி வாய்ப்புகளை கருத்தில் கொண்டு விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக அரசு பல கொள்கைகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.*

*பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (பி.எம். எஃப்.பி.ஒய்.) கீழ் பயிர் காப்பீடு.*

*பிரதம மந்திரி கிரிஷி சின் சாயி யோஜனா (பி.எம்.கே. எஸ்.ஒய்.) திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்திற்கான சிறந்த அணுகல்.*

*எஃப்.சி.ஐ. செயல்பாடுகளுக்கு கூடுதலாக பி.எம்.ஆ.ஷாவின் கீழ் புதிய கொள்முதல் கொள்கை.*

*கிசான் கிரெடிட் கார்டுகள் (கே.சி.சி.) விவசாயப் பயிர்களைத் தவிர பால் மற்றும் மீன் வளத்துறை பயனாளிகளுக்கும் உற்பத்திக் கடனை வழங்குகின்றன.*

*10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (எப்.பி.ஓ.) உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.*

*நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (என்.எம்.எஸ்.ஏ), மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப இந்திய விவசாயத்தை மிகவும் நெகிழ்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான உத்திகளை உருவாக்கி, செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*இந்திய விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் திறன் கொண்ட ட்ரோன் தொழில்நுட்பங்களை விவசாயத்தில் பயன்படுத்துதல்.*

*தேனீ வளர்ப்பு, ராஷ்டிரிய கோகுல் இயக்கம், நீலப்புரட்சி, வட்டி மானியத் திட்டம், வேளாண் காடு வளர்ப்பு, மறுசீரமைக்கப்பட்ட மூங்கில் இயக்கம், புதிய தலைமுறை நீர்வடி நிலப்பகுதிக்கான வழிகாட்டு நெறிகளை செயல்படுத்துதல் போன்றவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை உறுதி செய்தல்.*

*வேளாண்மை மதிப்புச் சங்கிலியின் அனைத்து நிலைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.*

*வேளாண் இடுபொருள் செலவைக் குறைப்பதற்காக மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம் வழங்குதல்.*

*மேற்கண்ட வகைகளில் வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஒன்றிய அரசின் வேளாண்துறை அமைச்சர் எழுத்துப்பூர்வமாகப் பதிலளித்துள்ளார்.*



நெல்லை மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பஜார் திடலில் பகுதிச் செயலாளர் துபாய் சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கழக மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் மாலைராஜா, லட்சுமணன், சுப்பிரமணியன், சுப. சீதாராமன், விஜிலா சத்யானந்த், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், அப்துல் கையூம், வில்சன் மணித்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கனடா அரசின் வேளாண்மை குறித்து கேட்டு

# தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நன்மைகள் குறித்து விளக்கினார்!

## கனடா அரசின் அமைச்சர் - அதிகாரிகளுடன் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனை!

*ஒட்டாவா, ஆக. 5-*

*முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கனடா நாட்டில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர் .கே. பன்னீர்செல்வம் ஒட்டாவா மாகாணத்தில் உள்ள கனடா நாட்டின் வெளியுறவு விவகாரத்துறை துணை அமைச்சர் திருமதி. காத்தலீன் டோனாவூ மற்றும் கனடா நாட்டின் வேளாண்மைத் துறை உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.*

*இக்கூட்டத்தில் கனடா அரசின் சார்பில் வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் குறித்தும், உத்திகள் குறித்தும், அந்நாட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற சலுகைகள் குறித்தும் புதிய கண்டுபிடிப்புகள் பற்றியும் கேட்டறிந்தார்.*

*மேலும், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு சார்பில் வேளாண்மைத் துறைக்கு என தனி நிதிநிலை அறிக்கை வழங்கியது பற்றியும், அனைத்து கிராம கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் குறித்தும், சொட்டு நீர் பாசனம், குருவைத் தொகுப்பு' மாடித்தோட்டம்' வேளாண்மை இயந்திரங்கள் வழங்குதல் பூங்காக்கள் அமைத்தல், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்குதல் மேலும் தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறைக்கு வழங்கி வரும் சலுகைகள் பற்றியும் வேளாண்மை வளர்ச்சிகள் குறித்தும் அந்நாட்டு அலுவலர்களிடம் எடுத்துரைத்தார்.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.*

முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவேந்தல் !

# தேனி தெற்கு மாவட்டத்தில் கலைஞர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி !

## மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை !



*தேனி, ஆக.5-*

*தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு : -*

*உலகே போற்றும் பன்முகப் படைப்பாளியாக முன்னேற்ற உணர்வோடு கலந்து, காலம் போற்றும் காவியமாக என்றும் வரலாற்றில் நிலைத்தப் பதிவாக சமூகநீதி, மக்களின் முன்னேற்றம், சாதிப் பிரிவினைகள் அகற்றம், தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, நடுத்தர மக்களுக்கு நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர், பன்முகச் சிறப்பு வாய்ந்த அவர் அகில இந்திய அரசியல் தலைவர்களால் கவரப்பட்டவர்.*

*பொது மக்களின் பிரச்சினைகளுக்கு முறையாகத் தீர்வு காணக் கூடியவராக, எப்பேர்ப்பட்ட கடினமான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளாக இருந்த போதும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும், பல்வேறு கட்சித்தலைவர்களுக்கும் முன் மாதிரியாக, ரோல் மாடலாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள்.*

*முத்தமிழின் முகவரியாக, புகழ்ச்சின்னமாக ஒளிவீசும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வாக 07.08.2023, திங்கட்கிழமை அன்று தேனி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து நகரம், ஒன்றிய, பேரூர், கிளைக்கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கம்பம் நா. இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

**கோவை தெற்கு மாவட்டம், வெள்ளலூர் பேரூர், 8வது வார்டைச் சேர்ந்த கே.ஜெகதீஸ்வரன், 11வது வார்டைச் சேர்ந்த பேக்கரி ஏ.கனகராஜூ – குறிச்சி வடக்கு பகுதி, சுந்தராபுரத்தைச் சேர்ந்த எம்.கோவிந்தராஜ், திருமதி என்.பரிமளராணி –குறிச்சி தெற்கு பகுதியைச் சேர்ந்த இரா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கோவிந்தராஜன்
### ஆகஸ்ட் 5 (2020)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளரப் பாடுபட்டவர்.


நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவிகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து
### ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.